# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8093813

1. District : விருதுநகர் மாவட்டம் | PS: ஊ.த.க.பிரிவு விருதுநகர் காவல்நிலையம் | Year: 2019 ஆண்டு | FIR No.: 07/2019 மு.த.அ. எண் | Date: 01.08.2019 நாள்

2. (i) Act சட்டம்: Sections பிரிவுகள்: 7(a) Prevention of
   (ii) Act சட்டம்: Sections பிரிவுகள்: Corruption Amendment
   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்: Act. 2018
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 31.07.2019 | Date from : நாள் முதல் 18.45 மணி | Date to : நாள் வரை 22.30 மணி
   Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் | Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் | Time : நேரம்
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் | Time : நேரம்

4. Type of Information : Written/ Oral :
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: சார் பதிவாளர் அலுவலகம், சாத்தூர்
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 25. கி.மீ வடக்கு
   Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு. க. மாரிமுத்து | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் க. கடம்பன்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு | (d) Nationality : நாட்டினம் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் | (g) Address : முகவரி துணை இயக்குநர் அலுவலர், சாத்தூர்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
   (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   திரு. சி. லோகநாதன் சார்பதிவாளர், சாத்தூர்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   வாரியான தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் கருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

இன்று 01.08.2019ம் தேதி மாலை 5.00 மணிக்கு விருதுநகர் உணவுத் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் S. விமலா ஆகிய நான் அலுவலக பணியில் இருக்கும் போது துணை ஆய்வாளர் அவர்கள் திரு. க. மாரிமுத்து அவர்கள் நிலையத்தில் ஆஜராகி ஒரு புகார் மனுவுடன் விருதுநகர் மாவட்டம். சாத்தூர் சார்-பதிவாளர் அலுவலகத்தில் வைத்து தயார் செய்த கிரய இணை ஆவண அறிக்கை நாள் 31.07.1988 இணைத்து நடவடிக்கை எடுக்க வேண்டி கொடுத்தார். அந்த மனு பின்வருமாறு (தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் R. ஆதிநாதன்.... பதவி காவல் ஆய்வாளர்நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு உ.த. & க. பிரிவு, விருதுநகர்.... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
01.08.2019 at 6.00PM

Name: பெயர் S. VIMALA.
Rank: நிலை INSPECTOR

விருதுநகர் ஊதக பிரிவின் குற்ற எண்.07/19 பிரிவு 7 of Prevention of Corruption Amendment Act 1988-ன் தொடர்ச்சி:- அந்த மனு விபரம் பின்வருமாறு: அனுப்புநர், திரு.க.மாரிமுத்து (54/19), தனி வட்டாட்சியர் (துணை ஆய்வுக்குழு அலுவலர்),சிப்காட், விருதுநகர் மாவட்டம், இருப்பு :- சாத்தூர். பெறுநர், காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, விருதுநகர். அய்யா, பொருள்: விருதுநகர் மாவட்டம், சாத்தூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் திடீர் இணை ஆய்வு செய்து சார் பதிவாளர் திரு.லோகநாதன் என்பவரிடமிருந்து லஞ்சப்பணம் கைப்பற்றியது - நடவடிக்கை எடுக்க வேண்டுவது - தொடர்பாக. நான் சாத்தூர் சிப்காட் தனி வட்டாட்சியராகவும், மாவட்ட ஆட்சியர் அவர்களின் உத்தரவின்பேரில் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலராகவும் இருந்து வருகின்றேன். நேற்று 31.07.2019ஆம் தேதி மாலை சுமார் 4.30 மணியளவில் சாத்தூர் சிப்காட் தனி வட்டாட்சியர் அலுவலகத்தில் பணியில் இருந்தபோது, சாத்தூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் பணிபுரியும் சார் பதிவாளர் அன்றன்று பதிவான பத்திர பதிவுகளுக்கு பத்திர எழுத்தர்களிடமிருந்து கையூட்டு பணம் பெறப்படுவதாக கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் மற்றும் விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலர்களின் வேண்டுகோளின்பேரில், நான் விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு வந்து விபரத்தை கேட்டுத்தெரிந்து கொண்டு, விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி.விமலா மற்றும் காவலர்களுடன் மேற்படி சார் பதிவாளர் அலுவலகத்தை இணை ஆய்வு செய்ய நேற்று 31.07.2019ஆம் தேதி மாலை சுமார் 6.00 மணிக்கு புறப்பட்டுச் சென்று சாத்தூரில், மெயின் ரோட்டில் சாத்தூர் தாலுகா அலுவலகத்திற்கு வடக்கு பக்கம் உள்ள சாத்தூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் மாலை 6.45 மணிமுதல் இரவு 10.30 மணி வரை திடீர் இணை ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேற்படி திடீர் இணை ஆய்வு சோதனையின்போது சாத்தூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் சார் பதிவாளராக பணிபுரியும் திரு.லோகநாதனின் இருக்கைக்கு பின்புறம் வடக்குப்பக்கம் இருந்த ஆவண அறையில் உள்பக்கம் பழைய ஆவணங்களை ஸ்கேன் செய்வதற்காக போடப்பட்டிருந்த டேபிளில் 10 காக்கி கலர் சிறிய மற்றும் பெரிய கவர்களை வைத்து, அந்த காக்கி கலர் கவர்களை கிழக்குப்பக்கம் பார்த்து நின்றவாறு பிரித்து அதிலிருந்த பணத்தை எடுத்து சேகரித்துக் கொண்டிருந்த மொத்தப் பணம் ரூ.90,000/-மும், அந்த 10 காக்கி கலர் சிறிய, பெரிய கவர்களும், நேற்றைக்கு (31.07.2019) பத்திரப்பதிவு செய்து கொடுத்ததற்காக, சம்பந்தப்பட்ட நபர்களிடமிருந்து அந்தந்த பத்திரத்தை எழுதிய பத்திர எழுத்தர்கள் பெற்று, பத்திரப்பதிவு முடிந்தபிறகு ஒவ்வொருவராக அலுவலகத்திற்குள் வந்து தனித்தனியாக காக்கிக்கலர் கவர்களுக்குள் வைத்து லஞ்சமாக கொடுத்த பணம் லஞ்சப்பணம் என தெரியவந்ததால், அந்த

பணம் ரூ.90,000/- மற்றும் 10 காக்கி கலர் சிறிய, பெரிய கவர்கள் கைப்பற்றப்பட்டது. இதுதொடர்பாக சார் பதிவாளர் திரு.லோகநாதனும், திடீர் இணை ஆய்வின்போது அலுவலகத்திற்குள் இருந்த தனிநபர் பத்திர எழுத்தர் திருமதி.அற்புதவள்ளியும் தனித்தனியே வாக்குமூலம் அளித்துள்ளனர். இதுதொடர்பாக எனது செயல்முறை நடவடிக்கைகள் நேற்று 31.07.2019ஆம் தேதி மாலை 6.45 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு இரவு 10.30 மணிக்கு முடிக்கப்பட்டது. அந்த திடீர் இணை ஆய்வு விபரம் பின்வருமாறு:- 1. ஆய்வு செய்த அலுவலகம் : சார் பதிவாளர் அலுவலகம், மெயின் ரோடு, சாத்தூர், 2. ஆய்வு ஆரம்பிக்கப்பட்ட நாள் மற்றும் நேரம் :- 31.07.2019ஆம் தேதி மாலை சுமார் 6.45 மணி, 3.ஆய்விற்கு தலைமை ஏற்ற அலுவலர்: திரு.மாரிமுத்து (54/19), மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், விருதுநகர், 4.ஆய்வின்போது ஆஜரில் இருந்த அலுவலர் : 1) திருமதி.விமலா, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, விருதுநகர், 5)ஆய்வு செய்யப்பட்டபோது அலுவலகத்திலிருந்த அரசு அலுவலர்கள் : 1) திரு.சீ.லோகநாதன் (54/19), த/பெ.சீனிவாசன், சார் பதிவாளர், சார் பதிவாளர் அலுவலகம், சாத்தூர், 2)திரு.மாரிமுத்து (49/19), த/பெ.சுப்பிரமணியன், உதவியாளர், சார் பதிவாளர் அலுவலகம், சாத்தூர், 3)திரு.பூ.குருலட்சுமி (27/19), க/பெ.நாகராஜன், உதவியாளர், சார் பதிவாளர் அலுவலகம், சாத்தூர், 4) திரு.ஷேக் அபுதாகீர் (35/19), த/பெ.கமால், கேமரா ஆபரேட்டர், சார் பதிவாளர் அலுவலகம், சாத்தூர், 5) திருமதி.ஜெயக்கொடி (36/19), த/பெ.சுப்பிரமணியன், அலுவலக உதவியாளர், சார் பதிவாளர் அலுவலகம், சாத்தூர், 6) திரு.க.மகாராஜன் (31/19), த/பெ.கண்ணன், தகவல் உள்ளீடு அலுவலர், சார் பதிவாளர் அலுவலகம், சாத்தூர், 6)ஆய்வு செய்யப்பட்டபோது அலுவலகத்திலிருந்த தனிநபர்:- திருமதி.அற்புதவள்ளி (49/19), க/பெ.சவுந்தரபாண்டியன், பத்திர எழுத்தர் (உரிம எண்.அ-54/1997), சாத்தூர். கிடைக்கப்பெற்ற நம்பகமான தகவலின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட மேல் அதிகாரி அவர்களின் அனுமதியின்பேரிலும், உயர் அதிகாரிகளின் உத்தரவுப்படியும் இன்று 31.07.2019ஆம் தேதி மாலை சுமார் 6.45 மணிக்கு காலம் 3 மற்றும் 4 கண்ட அலுவலர்கள் சகிதம் சாத்தூரில், மெயின் ரோட்டில் சாத்தூர் தாலுகா அலுவலகத்திற்கு வடக்கு பக்கம் உள்ள சாத்தூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் திடீர் இணை ஆய்வு நடத்தப்பட்டது. மேற்படி சாத்தூர் சார் பதிவாளர் அலுவலகம் கிழக்கு வாசல் கொண்ட காம்பவுண்டிற்குள், கிழக்கு வாசல் கொண்ட அரசு கட்டிடத்தில் செயல்பட்டு வருகின்றது. மேற்படி அலுவலகத்திற்குள் உள்ளே நுழைய அலுவலக உதவியாளரின் இருக்கையும், அதற்கு அடுத்தாற்போல் தகவல் உள்ளீடு அலுவலரின் இருக்கையும், அதற்கு அடுத்தாற்போல் சார் பதிவாளர் இருக்கை மேடைமீது உள்ளது. சார்பதிவாளர் இருக்கைக்கு எதிரே உள்ள பீரோக்களுக்கு வடக்கு பக்கம் இரண்டு உதவியாளர்களின் இருக்கைகளும், அதற்கு வடக்கு

பக்கம் கணிணி அறையும், மேற்படி உதவியாளர்களின் இருக்கைக்கு எதிரே சார்பதிவாளரின் இருக்கைக்கு பின்புறம் வடக்குப்பக்கம் ஆவண அறையும் உள்ளது. மேற்படி சார்பதிவாளர் அலுவலகத்திற்குள் நுழைந்தவுடன், காலம்-5 வரிசை எண்.1ல் கண்ட சார் பதிவாளர் திரு.லோகநாதனின் இருக்கை தவிர மற்ற இருக்கைகளில் அந்தந்த உதவியாளர்கள் அமர்ந்து அவரவர்களது பணிகளை செய்துகொண்டிருந்தனர். காலம்-5 வரிசை எண்.5ல் கண்ட இருக்கைக்கு எதிரே காலம்-6ல் கண்ட தனிநபர் பத்திர எழுத்தர் திரு.அற்புதவள்ளி என்பவர் நின்றுகொண்டிருந்தார். சார் பதிவாளர் திரு.லோகநாதன் அவரது இருக்கைக்கு பின்புறம் வடக்குப்பக்கம் இருந்த ஆவண அறையில் உள்பக்கம் பழைய ஆவணங்களை ஸ்கேன் செய்வதற்காக போடப்பட்டிருந்த டேபிளில் காக்கி கலர் கவர்களை வைத்து, அந்த காக்கி கலர் கவர்களை கிழக்குப்பக்கம் பார்த்து நின்றவாறு பிரித்து அதிலிருந்த பணத்தை எடுத்து சேகரித்துக் கொண்டிருந்தார். அவரிடமும், அவரவர் இருக்கைகளில் அமர்ந்து பணி செய்துகொண்டிருந்த காலம்-5ல் கண்ட வரிசை எண்.2 முதல் 6 வரை உள்ள பணியாளர்களிடமும், காலம்-6ல் கண்ட தனிநபர் திருமதி.அற்புதவள்ளியிடமும் விபரம் சொல்லி திடீர் இணை ஆய்வு செய்யப்பட்டது. சார் பதிவாளர் திரு.லோகநாதன் நின்றுகொண்டிருந்த, அவருக்கு முன்னால் டேபிளில் காக்கி கலர் சிறிய, பெரிய கவர்களும், அதிலிருந்து எடுத்து சேகரித்து வைக்கப்பட்டிருந்த கத்தைகத்தையான ரூபாய்களும் இருந்தன. அந்த கத்தைகத்தையாக இருந்த ரூபாய்களை துணை ஆய்வுக்குழு அலுவலரால் எடுத்து எண்ணிப்பார்க்க அதில் (2000x34=68,000, 500x41=20,500, 200x6=1,200, 100x3=300) ரூ.90,000/- (ரூபாய் தொண்ணூறாயிரம்) இருந்தது. அவற்றைப்பற்றி சார் பதிவாளர் திரு.லோகநாதனிடம் கேட்க, அவர் அந்த பணம் முழுவதும் இன்றைக்கு (31.07.2019) பத்திரப்பதிவு செய்து கொடுத்ததற்காக, சம்பந்தப்பட்ட நபர்களிடமிருந்து அந்தந்த பத்திரத்தை எழுதிய பத்திர எழுத்தர்கள் பெற்று, திருமதி.சத்யா ஒரு காக்கி கலர் சிறிய கவரில் அதன் மடிக்கப்பட்ட சிறிய பகுதியில் சத்யா என்று பென்சிலால் எழுதி ரூ.2000/-மும், திரு.ஜெயசிங், திரு.சுந்தரபாண்டியன், திருமதி.பானு ஆகிய மூவருக்கும் சேர்த்து திரு.சுந்தரபாண்டியன் ஒரே காக்கி கலர் பெரிய கவரில் அதன் மடிக்கப்பட்ட சிறிய பகுதியில் சுபா என்று பென்சிலால் எழுதி ரூ.13,000/-மும், திருமதி.அற்புதவள்ளி ஒரு காக்கி கலர் பெரிய கவரில் அதன் மடிக்கப்பட்ட சிறிய பகுதியில் அ என்றும், 22 என்று வட்டமிட்டும் பென்சிலால் எழுதி ரூ.22,000/-மும், திரு.சந்தனராஜா எதுவும் எழுதப்படாத ஒரு காக்கி கலர் சிறிய கவரில் ரூ.5,500/-ம், திரு.ஆனந்தராஜாமணி நான்கு காக்கி கலர் சிறிய கவர்களில், அதன் மடிக்கப்பட்ட சிறிய பகுதியில் ஆ என்று பென்சிலால் எழுதிய இரண்டு கவர்களில் முறையே ரூ.7,500/-, ரூ.5,000/-மும், எதுவும் எழுதப்படாத இரண்டு கவர்களில் முறையே ரூ.7,500/-, ரூ.5,000/-மும் ஆக

மொத்தம் ரூ.25,000/-ம், திரு.டேனியல் ஒரு காக்கி கலர் சிறிய கவரில் அதன் மடிக்கப்பட்ட சிறிய பகுதிக்கு அருகில் டேனியல் என்று பென்சிலால் எழுதி ரூ.7,000/-மும், திரு.முருகையா ஒரு காக்கி கலர் பெரிய கவரில் அதன் மடிக்கப்பட்ட சிறிய பகுதியில் முரு என்று பென்சிலால் எழுதி ரூ.15,500/-மும் பத்திரப்பதிவு முடிந்தபிறகு ஒவ்வொருவராக அலுவலகத்திற்குள் வந்து தனித்தனியாக மேலே சொன்னவாறு காக்கிக்கலர் கவர்களுக்குள் வைத்து லஞ்சமாக கொடுத்தார்கள் என்று கூறினார். ஆகையால் அந்த 10 காக்கி கலர் சிறிய, பெரிய கவர்களும், சார் பதிவாளர் திரு.லோகநாதனால் அந்த கவர்களுக்குள் இருந்து எடுக்கப்பட்ட பணம் (2000x34=68,000, 500x41=20,500, 200x6=1,200, 100x3=300) ரூ.90,000/-மும், சார் பதிவாளர் திரு.லோகநாதன் இன்று (31.07.2019) பத்திரப்பதிவு செய்து கொடுத்ததற்காக சம்பந்தப்பட்ட நபர்களிடமிருந்து பத்திர எழுத்தர்கள்மூலம் காக்கி கலர் சிறிய, பெரிய கவர்களில் வைத்து வாங்கிய லஞ்சப்பணம்தான் என உறுதிசெய்யப்பட்டு கைப்பற்றப்பட்டது. பின்னர் அவரையும், அவர் இருந்த ஆவண அறையையும், அவரது இருக்கையையும் சோதனை செய்ய அவரது பாக்கெட்டிலிருந்து ரூ.1,120/- மட்டும் இருந்தது. அந்த பணம்பற்றி கேட்க, அது தனது சொந்தப்பணம் என்றும், தான் இன்று (31.07.2019) ரூ.2,000/- செலவுக்கு கொண்டுவந்ததாகவும், அதில் ரூ.880/- செலவழித்ததுபோக மீதியுள்ள ரூபாய் என்று சொன்னார். எனவே அந்த பணத்தை அலுவலகத்திலிருந்த தனிநபர் பணஇருப்பு பதிவேட்டுடன் ஒப்பிட்டுப் பார்க்க அவர் சொன்னதுபோல் சரியாக இருந்ததால், அந்த பணம் அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. அதேபோல் அலுவலகத்திலிருந்த காலம்-5ல் கண்ட வரிசை எண்.2 முதல் 6 வரை உள்ளவர்களையும், அவர்களது இருக்கைகளையும் சோதனை செய்து, அவரவர்களிடமிருந்த பணத்தை எடுத்து அலுவலகத்திலிருந்த தனிநபர் பணஇருப்பு பதிவேட்டுடன் ஒப்பிட்டுப் பார்க்க சரியாக இருந்ததால், அவரவர்களிடமே அந்த பணம் ஒப்படைக்கப்பட்டது. பின்னர் காலம்-6ல் கண்ட தனிநபர் திருமதி.அற்புதவள்ளியை சோதனை செய்ய அவரிடம் ரூ.800/- மட்டும் இருந்தது. அது அவரது சொந்தப்பணம் என்று கூறியதால், அந்த பணம் அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. பின்னர் எதற்காக சார் பதிவாளர் அலுவலகத்திற்குள் வந்தீர்கள் என்று கேட்டபோது, அவரைப்போன்ற அனைத்து பத்திர எழுத்தர்களும் அன்றன்று பதிவாகும் பத்திரப்பதிவுகளுக்கு ஏற்ப சம்பந்தப்பட்ட நபர்களிடமிருந்து பதியப்பட்ட சொத்தின் மதிப்பிற்கு ஏற்றவாறு அவர்களிடமிருந்து பணத்தைப்பெற்று சார் பதிவாளர் திரு.லோகநாதனிடம் அன்றன்று மாலைநேரம் கவரில் வைத்து கொடுப்பது வழக்கமாகும் என்றும், அவ்வாறு இன்று (31.07.2019) அவர்மூலம் பதிவான எட்டு (8) பத்திரப்பதிவிற்கு, பத்திரப்பதிவு செய்து கொடுத்ததற்காக சம்பந்தப்பட்ட நபர்களிடமிருந்து பதியப்பட்ட சொத்தின் மதிப்பிற்கு ஏற்றவாறு அவர்களிடமிருந்து

பணத்தைப்பெற்று சார் பதிவாளர் திரு.லோகநாதனிடம் ரூ.22,000/-த்தை ஒரு காக்கி கலர் பெரிய கவரில் வைத்து அதன் மடிக்கப்பட்ட சிறிய பகுதியில் அ என்றும், 22 என்று வட்டமிட்டும் பென்சிலால் எழுதி கொடுத்தேன் என்றும், அவரைப்போல் மற்ற பத்திர எழுத்தர்களான திருமதி.சத்யா, திரு.சுந்தரபாண்டியன், திரு.சந்தனராஜ், திரு.டேனியல், திரு.ஆனந்தராஜாமணி, திரு.முருகையா ஆகியோர்களும் அவர்கள்மூலம் பதிவான பத்திரப்பதிவிற்கு, பத்திரப்பதிவு செய்து கொடுத்ததற்காக சம்பந்தப்பட்ட நபர்களிடமிருந்து பதியப்பட்ட சொத்தின் மதிப்பிற்கு ஏற்றவாறு அவர்களிடமிருந்து பணத்தைப்பெற்று சார் பதிவாளர் திரு.லோகநாதனிடம் காக்கி கலர் கவர்களில் வைத்து கொடுத்துவிட்டு சென்றுவிட்டார்கள் என்றும், அவரும் செல்லத்தயாராக இருந்தநிலையில் தாங்கள் வந்துவிட்டீர்கள் என்றும் கூறினார். பின்னர் அலுவலகத்திலிருந்த H-கணக்கு பதிவேட்டை (ஆரம்பம் 31.07.2015, தொகுதி எண்.28) பார்வையிட, அதில் பக்கம் 134-ல் 31.07.2019ன்படி அக்கவுண்ட்-C-யின் பிரகாரம் ரூ.12,300/-ம், பெர்மனென்ட் அக்கவுண்ட்-ன் பிரகாரம் ரூ.250/-ம் இருந்தது. அதுபற்றி மேற்படி பதிவேட்டை பாராமரிக்கும் சார் பதிவாளர் திரு.லோகநாதனிடம் கேட்க, அதற்கு அவர் அக்கவுண்ட்-C-யில் உள்ள ரூ.12,300/-ம் படைவீரர் கொடிநாள் நிதி இரசீது புத்தகத்தின்மூலம் (இரசீது எண்.6909001 முதல் இரசீது எண்.6909123 வரை) வசூலான தொகை என்றும், அந்த பணம் ரூ.12,300/- மற்றும் P.A. பணம் ரூ.250/-ம் ஆக மொத்தம் ரூ.12,800/-ம் ஆவண அறையில் உள்ள பணப்பெட்டியில் உள்ளது என்று பணப்பெட்டியை திறந்து காண்பித்தார். அவற்றை எடுத்து எண்ணிப்பார்க்க அது சரியாக இருந்தது. எனவே அந்த பணம் அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. மேலும் அலுவலகத்தில் உள்ள 1)சாத்தூர் சார் பதிவாளர் அலுவலக வருகைப்பதிவேடு (பக்கம் 1 முதல் 31 வரை), 2)தனிநபர் பண இருப்பு பதிவேடு ஆகியவை கைப்பற்றப்பட்டது. பின்னர் சார் பதிவாளர் திரு.லோகநாதன் மற்றும் தனிநபர் பத்திர எழுத்தர் (உரிம எண்.அ-54/1997) திருமதி.அற்புதவள்ளி ஆகியோர்களின் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டது. இந்த திடீர் இணை ஆய்வு இன்று (31.07.2019) இரவு 10.30 மணிக்கு முடிக்கப்பட்டது. எனவே நேற்று (31.07.2019) எனது தலைமையில் சாத்தூரில், மெயின் ரோட்டில் சாத்தூர் தாலுகா அலுவலகத்திற்கு வடக்கு பக்கம் உள்ள சாத்தூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட திடீர் இணை ஆய்வில் மேற்படி அலுவலகத்தில் பணிபுரியும் சார் பதிவாளர் திரு.லோகநாதன் என்பவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட பணம் ரூ.90,000/-மும், அந்த 10 காக்கி கலர் சிறிய, பெரிய கவர்களும், நேற்றைக்கு (31.07.2019) பத்திரப்பதிவு செய்து கொடுத்ததற்காக, சம்பந்தப்பட்ட நபர்களிடமிருந்து அந்தந்த பத்திரத்தை எழுதிய பத்திர எழுத்தர்கள் பெற்று, பத்திரப்பதிவு முடிந்தபிறகு ஒவ்வொருவராக அலுவலகத்திற்குள் வந்து

தனித்தனியாக காக்கிக்கலர் கவர்களுக்குள் வைத்து லஞ்சமாக கொடுத்த பணம் லஞ்சப்பணம் என தெரியவந்ததால், அவர்மீது பத்திரப்பதிவு செய்து கொடுத்ததற்காக சம்பந்தப்பட்ட நபர்களிடமிருந்து பத்திர எழுத்தர்கள் மூலம் லஞ்சப்பணம் பெற்ற குற்றத்திற்காக வழக்குப் பதிவு செய்து நடவடிக்கை எடுக்க இந்த புகார் மனுவை என்னுடைய செயல்முறை நடவடிக்கையின் அறிக்கையை இத்துடன் இணைத்து இன்று (01.08.2019) மாலை 5.00 மணிக்கு தங்களிடம் புகார் மனுவை அளிக்கிறேன்.ஒப்பம் (க.மாரிமுத்து), தனி வட்டாட்சியர் (துணை ஆய்வுக்குழு அலுவலர்), சிப்காட், விருதுநகர் மாவட்டம், இருப்பு :- சாத்தூர். Received a complaint and registred a case in Virudhunagar V&AC Crime No.07/2019 U/S 7 of prevention of corruption (Amendment) Act 2018 on 01.08.2019 at 17.00 hrs First information report (original copy) and complaint are submitted to the Honble Chief Judicial Magistrate cum Special Judge Srivilliputhur and copies submitted to the concerned Officers. (sd) S.Vimala, 01/08/19, Inspector of Police, V&AC, Virudhunagar.

01/08/2019
(S.VIMALA)
INSPECTOR OF POLICE
V & AC. VNR.